மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# கரிசல் வட்டாரத்தில் ஜாதிய நிலைகள்

**க. பானுமதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**அறிமுகம்**

இந்திய அரசாங்கம் நிர்வாக வசதிக்காக மாநிலம், யூனியன் பிரதேசம், மாவட்டம், வட்டம், பேரூர், சிற்றூர், கிராமம் எனப் பிரித்தும் அவற்றின் எல்லைகளை வகுத்தும் தந்துள்ளது. அவற்றில் ஒரு பகுதியான கரிசல் நிலப்பகுதியிலுள்ள சாதிய வாழ்வியல் நிலைகள் பற்றி ஆசிரியர் பொன்னீலன் அவர்களது கூற்றுகள் இந்த ஆய்வில் முன்னிறுத்தப்படுகின்றன.

**கரிசல் வட்டாரம்**

“கரிசல் வட்டாரம் என்பது 1910ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. பின்னர் ஆட்சி வசதிக்காக இராமநாதபுரம் மாவட்டத்துடன் ஒரு சில பகுதிகள் பிரிந்து இணைந்தது”. மதுரைக்குத் தெற்கிலுள்ள திருமங்கலம் முதல் திருநெல்வேலிக்கு வடக்கிலுள்ள கங்கை கொண்டான் வரையிலும் பரவலாக உள்ளது கரிசல் நிலம். இதுவே கரிசல் வட்டாரம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

**ஜாதி நிலைகள்**

ஜாதி என்பது ஒரு சிறந்த வகை என்ற பொருளைத் தரும். நல்ல ஜாதி மரம், நல்ல ஜாதி குதிரை, மாடு என்று வகைப்படுத்துதல் பொருட்டு அமைந்தது. முற்காலத்தில் தொழில் அடிப்படையில் ஜாதிகள் உருவாகின. ஆனால், இன்று மனிதனை மனிதன் தனிமைப்படுத்தி ஒதுக்கி வைத்து அடிமைப்படுத்தி வாழும் அமைப்பிற்கு “ஜாதி” என்று முத்திரையிட்டுக் கூறி வருகின்றனர்.

**கடவுள் என்பதன் பொருள்**

கடவுள் என்பவர் அரூபமான ஒன்று. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காந்த சக்தி. எனினும், அதை நாம் உணர்வதற்கான முதல் படியே உருவ வழிபாடாகும். இந்து மதத்தில் முப்பத்து மூன்று கோடி கடவுள்கள் உள்ளதாக வேதங்கள் குறிப்பிடுகின்றன. இங்கு கோடி என்பது எண்ணிக்கையால் அல்ல. கோடி என்பது உச்சத்தை, சிறந்த இடத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

**வழிபாட்டு முறைகள்**

கடவுள் வழிபாட்டு முறைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை:

- சிறு தெய்வ வழிபாடு
- பெருந் தெய்வ வழிபாடு
- குல தெய்வ வழிபாடு
- முன்னோர் வழிபாடு

இயற்கை வழிபாடே உலகின் ஆதி வழிபாட்டு முறையாக இருந்து வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் தோன்றி வளர்ந்தன.

**கடவுளின் பெயர்களைச் சூட்டல்**

கரிசல் நிலப்பகுதியிலுள்ள விளிம்பு நிலை மக்கள் அனைவரும் சிறு தெய்வ வழிபாடுகளில் அதித நம்பிக்கை கொண்டிருந்ததால் சிறு தெய்வங்களின் பெயர;களையே தங்கள் வாரிசுகளுக்குச் சூட்டி மகிழ்கின்றனர்.

பொன்னீலன் தனது நாவல்களில் எசக்கி, (இசக்கியம்மன்) மாடன், மாடசாமி, சக்கரைச்சாமி, நீலம்மை, பொன்னம்மை, முத்து, முத்தையா, (முத்தாரம்மை) சங்கரன் போன்ற வட்டார சிறு தெய்வங்களின் பெயர்களையே தனது கதாபாத்திரங்களுக்குச் சூட்டியுள்ளார்.

**கடவுளின் நிலை**

இந்திய நாட்டில் எதற்குப் பஞ்சம் உள்ளதோ, இல்லையோ ஜாதிக்கும், கடவுளுக்கும் பஞ்சமே இல்லை. ஜாதிக்கொரு சங்கம், கட்சி இருப்பதைப் போல் ஜாதிக்கொரு கடவுளும் வழிபடும் முறைகளும் இருக்கின்றன. குறிப்பிட்ட இனத்தவரின் சிறு தெய்வங்களைப் பிற இனத்தவர் வழிபடுவதில்லை. அந்தந்த இனவாரியாக தெய்வங்களும் பிரித்து வணங்கப்படுகின்றன. ஓர் இனத்தவர் தெய்வங்களை வேறு இனத்தவர் வழிபடக் கூடாது என்றும் அவ்வாறு வழிபட்டால் தங்களுக்கு சாமி குத்தமாகி விடும் என்றும் காலங்காலமாகச் சொல்லி வைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் சுற்று வட்டாரத்திலுள்ள பதினெட்டுபட்டி மக்களுக்கு மட்டும் சொந்தமென்று கொண்டாடப்படும் கோயில் இன்றும் நடைமுறையில் உள்ள வழக்கு முறையாகும்.

**மறைக்கப்பட்ட மர்மங்கள்**

சிறு தெய்வ வழிபாடாகத் தொடங்கி இன்று பெருந்தெய்வ வழிபாடாக மாறி உள்ளது மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில். இக்கோயில் பற்றி பல்வேறு காலகட்டத்தில் பல கதைகள் நிலவியதையும் அதையே நம்பி வழிபடும் விதங்களையும் அழகாக பொன்னீலன் வெளிக் கொணர்ந்துள்ளார்.

“மணலை புற்றாக கட்டி சிறுவர் விளையாடிய பின் அதை அழிக்கும் போது ரத்தம் வந்து பின்னர் பூஜை செய்து வழிபட்டு வந்ததாகவும் புத்த துறவியின் சமாதி இடம் என்றும் புத்த விகார்கள் இருக்கிற ஐந்து முக ஸ்தூப வடிவம் தேவியின் இருமுகம் ஐந்து முகமாக உள்ளதாக” ஒப்புமைப் படுத்தியும் பல சான்றுகளை ஆசிரியர் பொன்னீலன் முன்னிறுத்துகிறார். ஆனால், பொன்னம்மை என்ற பெண் ‘மாண்டகாடு’ மண்டைக்காடு என்கிற புராணக்கதையே இறுதியாக நிலைபெற்றுவிட்டது.

இவ்வாறு பல புனைகதைகள் கூறப்பட்டாலும் இங்கு வாழும் கிறித்துவர்களும் இந்துக்களும் கூடியே ‘அம்மன்கொட’ என்ற சிறப்பான விழா எடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது. “தலைமுறை தலைமுறையா நாங்க கத்தோலிக்க வேதம்ண்ணா. ஆனா அம்மங்கோயில் நாங்கதான் முன்ன வந்து நிக்கிறோம்... பத்திரகாளி வளத்த வம்சம்னு சொல்வாவ” என்று கலவர சம்பவத்தைக் கூறுமிடத்து நிலையான ஒற்றுமை உணர்வையும் சமயங்கள் கடந்த வழிபாட்டு முறைகளையும் கண்முன் நிறுத்தியுள்ளார் ஆசிரியர்.

**உணவில் ஜாதிய நிலைகள்**

மனிதன் உணவை உடலை வளர்ப்பதற்கான காரணியாகக் கருதாமல் அதைப் பண்பாட்டின் அடையாளமாகக் கருதினான். உணவு என்பது இங்கு அன்பாக, அறமாக, ஈகையாக, ஒழுங்காக, உயர்வாக, தானமாக, படையலாக, சாதி-மத இனக் கூற்றின் தடயமாகக் காட்டப்படுகிறது.

ஆரியர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் நீர், நில வாழ் உயிரிகள் உண்டதற்கான ஆதாரங்கள் உள்ளதாக கருதப்படுகிறது. இது போன்றே மொகஞ்சதாராவில் கிடைத்த குறிப்புகளில் ஆமை, மீன், நண்டு, ஆடு, மாடு, பறவைகள் உண்டதற்கான சான்றுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இன்று அரிசியும், நெய்யும், மாமிசமும் கலந்து அமைத்த புலவுச்சோறு போன்று அக்காலத்திலும் சமைக்கப்பட்டது.

**‘‘பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்”**

என்று குறிஞ்சிப்பாட்டு எடுத்து இயம்புகிறது.

இன்று வரலாறு தெரியாமல் கறி உண்பவர்களை ஒதுக்கும் நிலையை,

**“தங்கச்சி, எங்கள இவ்வளவு இழிவா . . .**
**நாங்க மாட்டுக்கறி சாப்பிடுறமாம்**
**வெள்ளைக்காரன் சாப்பிட்டா அது**
**தீட்டில்லையாம், நாம் சாப்பிட்டாத் தீட்டாம் . . .”**

என்று கூறுமிடத்தும்,

‘‘ஆமம்மா . . . பரமசிவனே மாட்டுக்கறி கேட்டகாலம் ஒண்ணு இருந்தா, அந்த மாட்டுக்கறி தீட்டானது எந்தக்காலம்? ஏதோ சதி நடந்திருக்கு தங்கச்சி . . .” என்று கூறுமிடத்தும், பொன்னீலனின் உற்றுநோக்கலின் ஆழம் நன்கு உணரமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. pate H.R.: madras district gazatters, Trinelveli, vo.1.
2. பொன்னீலன்: மறுபக்கம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை,2010.
3. சாமி. சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை, 2009.